# வேலை வெற்றிடம்

## கழிவுப் பொருள் முகாமைத்துவ அதிகாரசபை (மேல் மாகாணம்)

## கீழுள்ள பதவிக்காக தகுதி பெற்ற இலங்கை பிரசைகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

உதவிப் பணிப்பாளர் (பொறியியலாளர்) – பதவி 01 (நிரந்தரம்)

பிரத்தியேக உதவியாளர் – பதவி 01 (ஒப்பந்தம்)

ஓட்டுநர் – பதவி 02 (நிரந்தரம்)

**பதவி** :- உதவிப் பணிப்பாளர் (பொறியியலாளர்) சிவில் - நிரந்த அடிப்படை – பதவி 01

**சம்பள அளவு** :- 91,690-10x2480-15x3450-168,240 MM 1-1

**கல்வித் தகைமை** :- அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் இருந்து பொறியியல் விஞ்ஞானம் (சிவில்) தொடர்பில் பட்டத்துடன் 02 ஆண்டுகள் குறித்த துறையில் அனுபவம்.

**பதவி** :- பிரத்தியேக உதவியாளர் - ஒப்பந்த அடிப்படை – பதவி 01

**சம்பள அளவு** :- 50540-10x540-7x630-4x1080-20x1280-90270

**கல்வித் தகைமை** :- **வெளிவாரி ஆட்சேர்ப்பு**

பட்டய செயலாளர் நிறுவனத்தின் டிப்ளோமா உடன் 02 ஆண்டுகள் அனுபம்.

**உள்ளக ஆட்சேர்ப்பு** :- க.பொ.த. (சா.த) கணிதம்/ சிங்களம் மற்றும் ஆங்கிலம் உட்பட 04 பாடங்களுக்கு திறமைச் சித்திகளுடன் 06 பாடங்கள் மற்றும் க.பொ.த. (உ.த) 03 பரீட்சைகள் மற்றும் கழிவுப் பொருள் முகாமைத்துவ அதிகாரசபையின் முகாமைத்துவ உதவியாளர் பதவியில் 06 ஆண்டுகள் அனுபவம்.

**பதவி** :- ஓட்டுநர் - நிரந்தர அடிப்படை – பதவி 02

**சம்பள அளவு** :- 43,880-10x490-10x540-40x590-12x630-67,040

**கல்வித் தகைமை** :- **வெளிவாரி ஆட்சேர்ப்பு**

க.பொ.த. (சா.த.) 06 பாடங்களில் ஒரே தடவையில் சித்தி பெற்றிருத்தல் மற்றும் சிறந்த இயந்திர அறிவு, செல்லுபடியான ஓட்டுநர் அனுமதிப்பத்திரம் (32 பயணிகளுக்கு குறையாதது) ஓட்டுநர் அனுமதிப்பத்திரத்தைப் பெற்ற பின்னர் அரச, மாகாண அரச சார்பு அல்லது தனியார் துறையில் 06 ஆண்டுகள் அனுபவம் மற்றும் நன்றாக கண்கள் தெரிந்திருத்தல்.

**வயது வரம்பு** :-

18 வயதுக்கு குறையாத 45 வயதுக்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும். உச்ச வயது வரம்பு உள்ளக விண்ணப்பதாரர்கள் அல்லது அரச அல்லது மாகாண அரச சேவையின் விண்ணப்பதாரர்களுக்கு பொருந்தாது.

**வேறு விடயங்கள் :-**

1. இணைக்கப்படும் விண்ணப்பதாரர்களின் அடிப்படைச் சம்பளத்தின் 10% ஊழியர் சேமலாப நிதியத்திற்காக அவரினால் செலுத்த வேண்டும் என்பதோடு 15% ஊழியர் சேமலாப நிதியத்திற்கும் 3% ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கும் அதிகாரசபையினால் ஏற்கப்படும்.

2. இணைக்கப்படும் விண்ணப்பதாரர்கள் நிறுவனக் கோவை, மேல் மாகாண நிதி ஒழுங்குமுறை, மேல் மாகாண அரச சேவை ஆணைக்குழு கட்டளைகள், இலங்கை அரசினால் அல்லது மேல் மாகாண சபையினால் விதிக்கப்பட்டுள்ள அல்லது அவ்வப்போது விதிக்கப்படும் கட்டளைகள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கு கீழ்படிதல் வேண்டும்.

**ஆட்சேர்ப்பு முறை :-** கழிவுப் பொருள் முகாமைத்துவ அதிகாரசபையினால் அழைக்கப்படும் நேர்முகப்பரீட்சைக் குழு ஒன்றின் முன்னிலையில் நேர்முகப்பரீட்சைக்கு உட்படுத்தப்படும். தகைமைகளை பூர்த்தி செய்யாத விண்ணப்பங்கள், முறையாக பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் மற்றும் தாமதித்துக் கிடைக்கின்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதோடு, விண்ணப்பம் கிடைத்திருப்பதாக அல்லது நிராகரிக்கப்பட்டிருப்பதாக அறியத்தரப்படும். (மேல் மாகாணத்தில் வசிக்கும் விண்ணப்பதாரர்களுக்கு அதிக முக்கியத்துவம் தரப்படும்)

**விண்ணப்பிக்க வேண்டிய முறை :-** தமது விபரங்களை உள்ளடக்கி நீங்கள் தயாரித்த விண்ணப்பத்தை தகைமைகளின் பிரதிகளுடன் 2026.04.06 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர், தலைவர், கழிவுப் பொருள் முகாமைத்துவ அதிகாரசபை (மே.மா), தும்போவில, கரதியான, பிலியந்தலை என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது wmawp.gov@gamil.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். விண்ணப்பங்களை இட்டு அனுப்பும் உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிடுதல் வேண்டும்.

தற்போது அரச/ மாகாண அரச சேவையில் ஈடுபட்டுள்ள விண்ணப்பதாரர்கள் விண்ணப்பப் படிவத்தை தமது சேவை தலைவர் மூலம் அனுப்ப வேண்டும் என்பதோடு நேர்முகப் பரீட்சைக்கு பங்கேற்பதற்காக எந்த ஒரு கொடுப்பனவும் வழங்கப்படமாட்டாது. மேலும் எந்த வகையிலும் நேர்முகப்பரீட்சைக் குழுவுக்கு அழுத்தம் கொடுப்பது அந்தப் பதவியை பெறுவதற்கு தகுதியற்றதாகக் கருதப்படும்.

**தலைவர்,**
**கழிவுப் பொருள் முகாமைத்துவ அதிகாரசபை,**
**மேல் மாகாணம்.**
**2026.03.19**